# THIRUMARAI AASAAN



**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385



**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 30 January 2017 Issue - 1


ஆசிரியர் உரை

## உனக்கான என் திட்டம் தீமைக்கல்ல சமாதானத்திற்கே

ஒரு புதிய வருடத்தை ஆவலோடும், எப்படியிருக்குமோ என்ற பதற்றம் நிறைந்த மனநிலையோடும் எதிர்பார்த்திருக்கும் வேளையில், அதிகாரமும், செல்வமும், செல்வாக்கும், கருணையும் கொண்ட நமது நம்பிக்கைக்குரிய ஒருவர் நம்மிடம் வந்து, **உனக்காக நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன், அது உனது தீமைக்கல்ல, மாறாக நன்மைக்கும், மேன்மைக்கும் சமாதானத்திற்குமானது** என்று சொன்னால் நமக் கெல்லாம் எப்படி இருக்கும்? அப்போஸ்தலர் நடபடிகள் பிறவிச் சப்பாணி போன்று குதித்து எழுந்து, நின்று, நடந்து ஆஹா, ஓஹோ என்று பேசி தலைகால் புரியாமல் துள்ளித் திரிவோம். அத்தோடு நம்முடைய கற்பனை வளத்துக்கும் சிறகு கட்டி, அவர் சொல்லும் திட்டம் அதுவாக இருக்குமோ, இதுவாக இருக்குமோ அல்லது எதுவாகத்தான் இருக்கும் என்று சிந்திக்கத் தொடங்கி, எது எப்படியோ இந்த வருடம் **படுஜோர்** என்று முடிவு கட்டி, ஆகாயத்தில் மிதக்க ஆரம்பித்து விடுவோம். அப்படித்தானே!

ஏதாவது ஒரு மனிதன் சொல்லுவதற்கே யதார்த்த நிலை இப்படியாக இருக்கும்போது, சர்வவல்லமையும், சகல அதிகாரமும், இரக்கமும், மன உருக்கமுள்ள தேவன் **உன் சமாதானத்திற்காக நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். அது நீ எதிர்பார்க்கும் திட்டம்தான்** என்று வெளிப்படுத்துவதை நாம் என்னவென்று சொல்லுவது? புதிய வருடத்திற்கான எதிர்பார்ப்பு எதுவுமில்லாத தெய்வ நம்பிக்கையாளர்கள் யாரவது இருக்கிறார்களா? அப்படியிருக்கும்போது நீ எதிர்பார்ப்பது நடக்கும் என்று தேவன் கூறுவதைக் காட்டிலும் பெரிதாக எது இருக்க முடியும்? இது

கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், தேவன் இப்படி எங்கே சொல்லியிருக்கிறார் என்று கேட்பீர்களானால், என்னோடு சேர்ந்து எரேமியா 29 : 11 – ஐ கவனியுங்கள். **நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படி நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்திற்கேதுவான நினைவுகளே** என்று.

பொய்யுரையாத தேவனுடைய இந்த வாக்குத்தத்த வார்த்தைகளைக் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளதுதானே. சரி, இந்த வார்த்தைகளின் மெய்ப்பொருளை நாம் உணர்ந்து, இவைகளிலிருந்து நமக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணிக்குள்ளாகப் புகுந்து வருவோம்.

எருசலேம் மாநகருக்கு ஓர் இரண்டு மைல் தொலைவிலிருந்த **ஆனதோத்** என்னும் ஆசாரிய கிராமத்திலிருந்து, தன் இளம் வயதில் தீர்க்கதரிசன ஊழியம் செய்யும் படியாக அழைக்கப்பட்டவர்தான் எரேமியா. யூதாவின் முக்கிய தீர்க்கதரிசிகளில் ஒருவர் இவர் வணங்காக் கழுத்துக் கொண்ட யூதாவின் குடிகளுக்கு எதிராக வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து கண்ணீரோடும், கம்பலையோடும் தன் தீர்க்க தரிசன ஊழியத்தை ஒரு நாற்பது ஆண்டுகள் எதிர்ப்புகள், மற்றும் துன்புறுத்துதல்களுக்கு மத்தியில் நிறைவேற்றினார்.

ஆயினும், **மாட்டோம்** (எரே. 6 : 16, 17) என்னும் நிலைப்பாட்டிலிருந்து மாறவே மாட்டோம், எந்த மாற்றத்தையும் கொண்டுவர மாட்டோம் என்று தேவ ஜனங்கள் பிடிவாதமாய் எதிர்த்து நின்றபடியால் பாபிலோனியரை இவர்களுக்கு எதிராக எழுப்பி, இவர்களை மேற்கொள்ள அனுமதித்து, ஒரு பகுதி மக்கள் பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுப் போக ஒப்புக் கொடுக்கப்பட்டார்கள். அப்படிச் சிறைப்பட்டுப்போனவர்களுக்கு எரேமியா தீர்க்கன் இரண்டு நிருபங்களை எழுதினார். **நிருபமா** அது புதிய ஏற்பாட்டில் தானே உண்டு, பழைய ஏற்பாட்டில் ஏது என்று கேட்கிறீர்களா? நியாயம் தான். சரி, தூரத்திலிருப்பவர்களுக்கு எழுத்தின் மூலம் அனுப்பப்படும் ஒவ்வொரு செய்தியும் நிருபம் தான். இந்த வார்த்தையை இப்பொருளினடிப் படையில் தான் பார்க்கவேண்டும். இப்படி எரேமியா எழுதின முதல் நிருபம் 29-ம் அதிகாரத்தில் உள்ளது. அது, சிறைப்பட்டுப்போன மூப்பர்களில் முதியவர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், சிறைப் படுப்போன சகல ஜனங்களுக்கும் எழுதி அனுப்பப்பட்டது (எரே. 29 : 2,3).

இந்த நிருபத்தின் ஊடே வருவதுதான் ஆறுதலையும், நம்பிக்கை யையும் கொடுக்கக்கூடிய நம்முடைய தலைப்புக்கான வசனம். இதற்கு முந்தின 29 : 10 ஐ பாருங்கள். பாபிலோனிலே எழுபது வருடம் நிறை

வேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப் பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றுள்ளது. இவ்வசனத்தில் அடிமைத்தனத்தை அனுமதித்த தேவன், அதன் காலம் **எழுபது ஆண்டுகள்** என்று தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால், எரேமியா காலத்துப் பொய் தீர்க்கதரிசிகளோ **இரண்டு வருடகாலம்** என்று ஆருடம் கூறினார்கள் ( எரே.28 : 3 ). தேவன் சொன்னதை எரேமியா பேசினார். ஆனால், அனனியா போன்ற பொய் தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குப் பிரியமாக இரண்டு வருடம் தான் என்று பொய் சொன்னார்கள்.

ஆதிகாலந் தொட்டு, பிசாசுக்கும், அவன் ஏவலாட்களான பொய் தீர்க்க தரிசிகளுக்கும் தொழிலே தேவனுடைய நித்தியத் திட்டத்தயைும், தேவனுடைய வார்த்தைகளையும் புரட்டுவதுதான். இங்கே, இந்தப் பொய் தீர்க்க தரிசியாகிய அனனியா, ஜனங்கள் பொய்யை நம்பும்புடி செய்த குற்றத்திற்காக, எரேமியா எப்படிக் கடிந்துகொண்டாரென்று பாருங்கள். **ஆகையால் இதோ உன்னைப் பூமியின் மேல் இராதபடிக்கு அகற்றி விடுவேன்; இந்த வருஷத்திலே நீ சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் உண்டாகப் பேசினாயே என்றான்** ( எரே. 28 : 15, 16 ). தேவன் தன்னுடைய வார்த்தைகளுக்கு விரோதமான செயல்பாட்டை எப்படிப் பார்க்கிறார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு, தேவ காரியங்களில் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியம்.

எரேமியாவின் இந்நிருபத்தில், நீங்கள் எழுபது வருடம் இருந்து தான் ஆகவேண்டும். குழப்பத்திற்கு இடம் தராதீர்கள், பொய்யை நம்பாதீர்கள் என்று எடுத்துரைக்கப்பட்டதோடு, திடமனதாயிருங்கள், உன் நம்பிக்கை வீண்போகாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு நம்பிக்கை நிறைவேறக் காத்திருக்குங் காலத்தில் யூதாவின் ஜனங்கள் பாபிலோனில் எப்படியாக நடந்துகொள்ள வேண்டுமென்ற வரைபடமும் கொடுக்கப்பட்டுள்ளது. அநேகராகிய நாமும்கூட நம்முடைய வாழ்வின் பலவிதமான எதிர்பார்ப்புகளை நெஞ்சில் சுமந்து அவைகள் நிறைவேறக் கார்த்திருக்கிறவர்களாகவே உள்ளோம். அவைகள் நிறைவேறப் பல வாரங்களாக பல மாதங்களாக, ஏன் சிலவற்றுக்காகப் பல வருடங்களாகக்கூடக் காத்துக் கொண்டிருக்கிறோம். காத்திருப்புக் காலம் சோதனைக் காலம் தான். ஆயினும், சோர்ந்து போகக் கூடாது. இப்படிபப்பட்ட நேரத்தில் ஞானி சாலமோனின் நீதிமொழிகள் வார்த்தைகளை நினைவில் கொள்ளவேண்டும். **நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும். விரும்பினது வரும் போதோ ஜீவவிருட்சம் போல் இருக்கும்** (நீதி. 13 : 12).

எரேமியா தீர்க்கன், எதிர்பார்ப்புக் காலத்தில் எப்படி நடந்துகொள்ள

வேண்டுமென்று யூதாவின் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதல், இப்புதிய ஆண்டில் பல எதிர்பார்ப்புகளுக்காகக் காத்திருக்கக் கூடிய நமக்கும் பலனளிக்கக் கூடியதாய் இருக்கிறபடியால் அவைகள் என்னவென்று பார்த்துப் பயனடைவோம்.

### I. இருக்கிற நிலையில் சிறப்பாகச் செயல்பட வேண்டும் ( 28 ; 4 - 6 ).

பாபிலோனில் சிறைப்பட்டுப்போன யூதர்களுக்கான முதல் நிருபத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், நம்முடைய செயலினிமித்தம் கர்த்தர் அனுமதிக்கும் சூழலை ஏற்று சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பது.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு இருக்கும் பொதுவான குணங்களில் ஒன்று மாறான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது, வழக்கமான காரியங்களுக்கு விடைகொடுப்பது. வேத வசனங்களை வாசித்துத் தியானிப்பதை நிறுத்துவது, வழக்கமாக ஜெபிக்கும் நேரத்தைத் தள்ளிப்போடுவது அல்லது ஜெபிக்காமலே விடுவது, கர்த்தருடைய காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது என்று எல்லாமே ஏறுக்குமாறாக நடக்கும். ஏன் இப்படி என்று கேட்டால்; **சூழ்நிலை சரியில்லை** என்று பதில் வரும். ஆனால், எல்லாம் எதிராகவும், ஏடாகூடமாகவும் நடக்கும் நேரத்தில் கூட நிலைத்த தன்மையோடு இருப்பதுதான் தேர்ந்த நிலைக்கு எடுத்துக் காட்டு. இதில் பக்திச் செயல்பாடும் அடங்கும். வழக்கமான வாழ்க்கைச் செயல்பாடும் அடங்கும். தானியேல், யோசேப்பு போன்றவர்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்ட யூதர்களும், இந்தப் பொதுவான மனநிலைக்கு விதிவிலக்காக இருக்கவில்லை. அத்தோடு. **நனைந்த ஆட்டுக்கு நரி உதவுவது** போன்று, பொய்த் தீர்க்கதரிசிகளின், **இரண்டு வருடம் தான்** என்ற வார்த்தைகளும் சேர்ந்து கொண்டது. ஆகவே, போன இடத்தில் **இடித்த புளியாக** இருந்து எதையும் செய்யாமல் நாட்களை எண்ண ஆரம்பித்துவிட்டார்கள். எழுபது எங்கே? இரண்டு எங்கே? சம்பந்தமே இல்லை. இப்படி உண்மைக்கு மாறான நிலையை நம்பி, எதிலும் நாட்டம் இல்லாமல் இருந்தபடியால், இப்படியாக அவர்களுக்கு எழுதப்பட்டது. **நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து, தோட்டங்களை நாட்டி அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள். நீங்கள் பெண்களை விவாகம் பண்ணி, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்று, உங்கள் குமாரருக்குப் பெண்களைக் கொண்டு, உங்கள் குமாரத்திகளைப் புருஷருக்குக் கொடுங்கள்; இவர்களும் குமாரரையும், குமாரத்திகளையும் பெறட்டும், நீங்கள் அங்கே குறுகமல் பெருகுங்கள்** ( 29 : 5, 6 ). இந்த வார்த்தைகளின் மூலம் தேவன் கொடுக்கும் செய்தி என்ன? அவர்கள்

தாம்பத்ய உறவில் ஈடுபட்டு பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் பெற வேண்டுமென்பதா? இல்லவே இல்லை. மாறாக, சிறையிருப்பு முடிவுக்குவர இரண்டு தலைமுறைகளாவது ஆகும் என்று உணர்த்துவதே. புரிகிறதா?

அருமையானவர்களே! நாம் நம்முடைய பக்தி வாழ்வில் யதார்த்த நிலையைப் புரிந்த வாழ்கிறவர்களாக உள்ளோமா? நாம் கடந்து செல்லக்கூடிய சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், அவைகளுக்குக் காரணம், நாம் தான். தேவன் கொடுத்த ஆலோசனைகளையும், எச்சரிப்புகளையும் புறக்கணித்ததின் விளைவுதான். மல்கியா 1 : 9 – ல் நாம் பார்ப்பதுபோல, **இது நம்மாலே வந்த காரியம்** ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவன் என்ன சொல்லுகிறாரோ, எதை எதிர் பார்க்கிறாரோ அதைத்தான் செய்யவேண்டும். ஊரும், உலகமும், பிசாசின் ஏவலாட்களும் கொடுக்கும் பொய் வாக்குறுதிகளை நம்பி, மூலையில் கிடந்து, பூலோக வாழ்க்கையையும் இழந்து, மேலோக வாழ்க்கையையும் நாசம் செய்துவிடக் கூடாது.

### II. கள்ளத்தீர்க்கதரிகள் மோசம்போக்க அனுமதிக்கக்கூடாது ( 8, 9)

பாபிலோனில் சிறைப்பட்டுப்போன யூதர்களுக்கான முதல் நிருபத் திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், எச்சூழலிலும் கள்ளத் தீர்க்கதரிசிகள் நம்மை மோசம் போக்க அனுமதிக்கக் கூடாது என்பது.

ஒரு தீர்க்கதரிசி என்பவன் தேவனுடைய வாயாக இருந்து தேவ ஆவியானவரின் ஏவுதலால் தேவசித்தத்தை வெளிப்படுத்துகிறவன். தேவ சித்தத்தை தேவ சத்தத்தால் வெளிப்படுத்தாத ஒருவன் கள்ளத்தீர்க்கதரிசி ஆகிறான். இந்த வகையில் ஆதியிலே ஏவாளையும், ஆதாமையும் தேவ சித்தத்திற்கு மாறாக வஞ்சித்த சாத்தான் தான் முதல் கள்ளத்தீர்க்கதரிசி. அவன் தாயம் போட்டு ஆரம்பித்துக் கொடுத்த இந்த ஆட்டம் வெகு மும்மு ரமாக இன்றளவும் நடந்து வருகிறது. பிசாசின் இந்தத் தப்பாட்டத்திற்கு முடிவு கண்ணுக்கு எட்டின தூரம் தெரியவில்லை.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு சிகப்புக் கம்பளம் விரிக்கும் விபரீத ஆசை மனிதனுக்கு ஆதிகாலந்தொட்டே இருக்கிறதென்பதை தேவன் அறிந்தே இருந்தார். அவன் எதை நோக்கி நகர்கிறான் என்பதை ஏதேன் தோட்டத்திலேயே பார்த்துவிட்டார். ஆகவே தான், இஸ்ரவேல் ஜனங்கள் கானானைச் சுதந்தரிக்க மோவாபின் சமவெளிகளில் காத்திருந்தபோது, தேவன் உங்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார் என்று மோசே தனது இரண்டாம் பிரசங்கத்தில் விளக்கமாக எடுத்துக் கூறினார். (14 : 44 - 26 : 19). அப்பிரசங்கத்தின் ஊடே அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் காரியமாக,

எப்படியாக நடந்துகொள்ள வேண்டுமென்று படம் போட்டுக் காட்டினார். கவனியுங்கள், **உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக் காரனாகிலும் எழும்பி : நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாகச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும் அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லு கிறவகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத் தோடும், முழு ஆத்துமாவோடும் அன்பு கூருகிறீர் களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்** (உபா. 13 : 1 - 3).

நன்றாகக் கவனியுங்கள். அவன் சொன்ன **அற்புதம் நடந்தாலும் அவன் சொல்லுகிறதைக் கேளாதிருப்பீர்களாக** என்கிறார். ஆனால், இன் றைக்கு என்ன நடக்கிறது. நடக்காத அற்புதங்கள் நடக்கிறதாகக் காண்பிக் கப்பட்டு அதனடிப்படையில் அந்த ஊழியக்காரர் வரம்பெற்ற ஊழியக்காரர், வல்லமை பெற்ற ஊழியக்காரர், ஆகவே, அவர் சொல்லுவதெல்லாம் வேதவாக்குதான் என்று அனாயசமாக நம்பிக் கொள்ளுகிறார்கள். தீர்க்கதரிசனங்களும், அற்புதங்களும், அடையாளங்களும்தான் ஒருவன் பிதாவின் சித்தம் செய்கிறான் என்பதற்கு அடையாளமாகவும், ஆதாரமாகவும் இருக்குமானால், இயேசு ஆண்டவர் ஏன் அவர்களைத் தமது மலைப்பிரசங்கத்தில் **அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்** என்று சாட வேண்டும் (மத். 7 : 22 , 23).

இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகள் பற்றித்தான் சிறையிருப்பிலிருந்த யூதர்களுக்கு எரேமியா எச்சரிக்கிறார். கள்ளத்தீர்க்கதரிகளும் சொப்பனக் காரரும் உங்களை மோசம்போக்க அனுமதிக்க வேண்டாம் ( 29 : 8 ). அவர்கள் பொய்யாகத் தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். நான் அவர்களை அனுப்பவில்லை என்று (29 : 9). அவர்கள் ஜனங்களை வசப்படுத்தும் விதம் குறித்து வேதம் என்ன பேசுகிறது பாருங்கள். **அவர்கள் என்னை அசட்டை பண்ணினவர்களை நோக்கி ; உங்களுக்குச் சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னார் என்று சொல்லுகிறதுமல்லாமல் ; தங்கள் இருதயக் கடினத்தில் நடக்கிற யாவரையும் நோக்கி ; உங்கள் மேல் பொல்லாப்பு வராது என்றும் சொல்லுகிறார்கள்** (எரே. 23 : 17) . இது எப்படி இருக்கு?.

அருமையானவர்களே! நம்முடைய நாட்களில் ஏராளமாய்ப் பெருகி யிருக்கும் கள்ளத்தீர்க்கதரிசிகள் காரியத்தில் நாம் எப்படியாக இருக்கி றோம்? எரேமியா காலத்து மக்களைப்போல் நாமும் ஏமாந்துபோகக்

கூடாது என்று தேவன் பேதுரு அப்போஸ்தலனைக் கொண்டு புத்திமதி கூறியுள்ளார். **கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார் கள்; அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேத புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள். அவர்களுடைய கெட்ட நடவடிக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்** ( II பேதுரு 2 : 1 , 2). இந்தப் புத்திமதியை நாம் ஏற்று பக்திவாழ்வில் நீதிக்கும், நியாயத்துக்கும், நம்மை ஒப்புக்கொடுக்கத் தீர்மானிப்போம்.

**III. தொலைநோக்குடையவர்களாயிருக்க வேண்டும் ( 29 : 11 )**

பாபிலோனில் சிறைப்பட்டுப்போன யூதர்களுக்கான முதல் நிருபத்தி லிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், பக்தி வாழ்வில் நாம் தொலைநோக்குடையவர்களாக இருக்க வேண்டும் என்பது.

ஓர் அவசரமான உலகத்தில் நாம் வாழ்ந்துகொண்டுள்ளோம். எங்கும் அவசரம், எதிலும் அவசரம். சுடச்சுட காரியங்கள் நடக்கவேண்டும். காலையில் ஒன்றிற்காக ஜெபித்தால் அது மாலையில் நடக்கவேண்டும். கர்த்தர் தரும் வாக்குத்தத்தத்தை நாம் இன்றைக்குப் படித்தால், அது சொல்லும் ஆசீர்வாதங்கள் நாளைக்கே அனுபவிக்க வேண்டும். தேவத்திட்டம் பற்றியும், தேவ சித்தம் பற்றியும் கவலையே இல்லை. இதே மனநிலைதான் முற்பிதாக்களின் காலந்தொட்டு இருந்து வருகிறது. ஆம், தேவன் கொடுத்த அற்புதமான வாக்குத்தத்தங்கள் நிறைவேறக் காத்திருக்காமல், **அவருடைய காலம்** மட்டும் பொறுத்திருக்காமல் அவசரப்பட்டவர்கள்தானே சாராளும், ஆபிரகாமும் ( ஆதி .12 , 16 அதி ) . தேவன் சொன்னபடி நினிவேயை அழிக்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டவன் தானே யோனா தீர்க்கன் (யோனா 3 : 4 ; 4 : 2).

இதே மனநிலை தான் எரேமியா காலத்திலும் இருந்தது. அடிமைத் தனம் சீக்கிரமாய் முடியவேண்டுமென்ற எதிர்பார்ப்பு. சீக்கிரம் நடந்தால் நல்லது. அதற்கேற்றபடி யார் போதிக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களைத் தேடுவது, அவன் சொல்லுவதை நம்புவது. இரண்டு வருடம் என்று சொன்ன அனனியாவுக்குப் பெரிய மரியாதை. ஆனால், எரேமியாவுக்குத் தலைகுனிவு (எரே. 28 : 11). ஜனங்கள் சீக்கிரமான தீர்வைத்தான் விரும்பு கிறார்கள். தேவத் திட்டத்தின் மீதும் அவருடைய வழிநடத்துதல் பேரிலும் நம்பிக்கையில்லை.

ஆயினும் எல்லாவற்றையும் பார்க்கிற தேவன் இதையும் பார்க்கிறார். அங்கே, உண்மை நிலையை எரேமியாவைக் கொண்டு எடுத்துக் கூறி னார். இரண்டு வருட மல்ல, எழுபது வருடம் என்று, **பாபிலோனிலே எழுபது**

**வருஷம் நிறை வேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்** ( எரே. 29 : 10 ). இதன் மூலம் தேவன் இங்கே என்ன சொல்லுகிறார்? உங்களது நாள்காட்டியின்படி காரியங்கள் நடக்க வேண்டுமென்று எதிர் பார்க்காதே, எனக்கென்று திட்டம் இருக்கிறது. அது நீண்ட காலத்திற்கானது. ஆயினும் அது உன் நன்மைக்கானது என்று எடுத்துரைக்கிறார்.

அருமையானவர்களே! நமது பக்தி வாழ்க்கையில் நாம் தொலை நோக்குச் சிந்தையுடவர்களாயிருந்து தேவச்சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து நாம் சூழ்நிலைகளைக் கையாள வேண்டும். யூதாவின் மக்களுக்கு 70 வருடம் என்று சொல்லப்பட்டுள்ளதால் ஐயோ, என் பிரச்சினை தீர நான் 70 ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா என்று புலம்ப ஆரம்பித்து விடாதீர்கள். அங்கே, ஒரு தேசத்துக்குச் சொல்லப்பட்ட எழுபதை, 70, 80 ஆண்டுகளை வாழ்நாளாகக் கொண்ட மனிதனின் வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்திப் பார்க்க வேண்டாம். ஆயினும், பிரச்சினை எதுவாக இருந்தாலும், எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், எவ்வளவு நாள்பட்டதாக இருந்தாலும் தேவத்திட்டத்துக்கும், சித்தத்துக்கும் ஒப்புக்கொடுத்துக் காத்திருக்க வேண்டும். தேவை அது தான். மற்றபடி அன்றாட அல்லல்களாலும், தற்காலிகப் பிரச்சினைகளாலும் சோர்ந்து போகக்கூடாது. பொய் தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளை நம்பி மோசம் போய்விடவும் கூடாது. அன்றாடப் பிரச்சினைகளும், தற்காலிகப் பிரச்சினைகளும் தன்னைப் பாதிக்க பவுலடியார் அனுமதித்திருந்தால், பக்தி வாழ்வில் தொலைநோக்குச்சிந்தை அற்றவராக இருந்திருந்தால், கொரிந்தியர் களுக்கு இவ்விதமாக எழுதியிருக்க முடியுமா? **மேலும், காணப்படுகிறவை களையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது** ( II கொரி. 4 : 17 ) என்று. உலக வாழ்க்கையைத் தாண்டின பரலோக சிந்தை தான் வேண்டும்.

ஆம், நம்முடைய குடியிருப்பு பரலோகம். அங்கிருந்து கர்த்தர் இயேசு வருவார் என்பதை எதிர்பார்ப்போமானால் ( பிலி. 3 : 20) பக்திவாழ்வில் உலகக் காரியங்களுக்கு காலக்கெடு நிர்ணயித்துச் செயல்பட மாட்டோம். மாறாக, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய சித்தத்திற்கும், சத்தத்திற்கும் சமூலமாக ஒப்புக்கொடுத்து வாழ்வோம். அப்பொழுது அவருடைய சித்தத்தின்படி நாம் எதிர்பார்த்திருக்கும் முடிவை நம்முடைய சமாதானத்திற்கென்று தேவன் கட்டளையிடுவார். அது அவரால் ஆகும். இந்த நம்பிக்கையோடு புதிய ஆண்டுக்கான பக்திச் செயல்பாடுகளைத் தொடருவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!! ●

# ஏன் நாங்கள் நியாயாத்தீர்ப்பில் விசுவாசம் வைக்கிறோம்?

Bro. J.C. சோட்

**நி**யாயத்தீர்ப்பு நாள் என்று ஒன்று இருக்குமென்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதன் பொருள், நாம் நம்மைப்பற்றியும், இந்த வழ்க்கையில் நாம் பேசின, செய்த, எல்லாவற்றையும் குறித்து கணக்கொப்புவிக்க வேண்டும். பெரும்பாலான ஜனங்கள், தாங்கள் செய்த வைகளைக் குறித்து யாருக்காவது கணக்கொப்புவிக்க வேண்டும் என்கின்ற கருத்தை விரும்புவதில்லை. அவர்கள் தவறு செய்யும்போது, காவல் அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல விரும்புவதில்லை. அதுபோல, அரசாங்கத்திற்கு முறையாக வரிசெலுத்து வதற்கான பொறுப்பை ஏற்க விரும்புவதில்லை. ஆனால், இவைகளெல்லாம் வாழ்வின் உண்மைகளா யிருக்கிறது. வேலை செய்பவர் முதலாளிக்கு பதில் கொடுக்க வேண்டும்; பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ செல்பவர்கள் தேர்வு எழுதியாக வேண்டும்; இராணுவத்தில் இருப்பவர்கள் தங்கள் உயர் அதிகாரிகளுக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். இப்படியாக, நம்முடைய வாழ்க்கையின் பல நிலைகளிலும் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். நாம் முதலாளிகளாக, செல்வந்தர்களாக, அல்லது நாம் மரித்துப் போனவர்க ளாக இருந்தாலொழிய, இப்பொறுப்புகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வழியே இல்லை. ஆனால், செல்வந்தர்கள், தேசங்களின் தலை வர்கள், இன்னுமாக உயிரோடிக்கிறவர்கள், மரித்தவர்கள் இப்படி எல்லோரும் ஒரு நாள் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நின்றே ஆக வேண்டும்.

எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொல்கிறார், **அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக் கிறபடியே** என்று ( எபிரெயர் 9 : 27 ). ஆனால், நியாயத்தீர்ப்பு நாளில் யாரெல்லாம் அங்கே இருப்பார்கள்? இது சம்பந்தமாகப் பவுல் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். **ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்** (II கொரிந்தியர் 5 : 10). அங்கே வெறுமனே ஒரு நியாயத்தீர்ப்பு மாத்திரமல்லாமல், அந்த நியாயசனத்திற்கு முன்பாக, நீதியுள்ள நியாயாதி பதியாகிய இயேசு கிறிஸ்து முன்பாக, எல்லோரும் தோன்றி, சரீரத்தில் அவனவன் செய்த நன்மையான மற்றும் தீமையான காரியங்களுக்காக கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதினார். **நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கின்றோம். ஆகையால், பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக் கிறோம். கிறிஸ்துவும், மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்ட வராயிருக்கும் பொருட்டு, மரித்தும், எழுந்தும், பிழைத்துமிருக்கிறார். இப்படி யிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாம் எல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி; முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க்கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக் கிறது. ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்** (ரோமர் 14: 7 – 12).

அத்தனே பட்டணத்து மக்களோடு பேசும் போது பவுல், அறியாமை யுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும், ஒரு நாளைக்குறித்திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றார் (அப். 17 : 30, 31). தேவன் ஒரு நாளை நியமித்திருக்கிறார். அதிலே இந்த உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்று சொல்வதை தயவு செய்து கவனியுங்கள். அதன் பொருள், தேவன் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார், அந்த நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கும். அது நேர்மையற்ற முறையில் இருக்காது, நியாயத்தீர்ப்பில் தேவன் பட்சபாதம் காட்டமாட்டார் அல்லது அவர் பாரபட்சமாக நடந்து கொள்ளமாட்டார். அந்த நாள் எப்போது என்று நமக்குத் தெரியாது. ஆனால், தேவனுக்குத் தெரியும். கர்த்தருடைய வருகையும் அப்படித்தான். அந்த நாள் தேவதூதர்களுக்குக் கூட தெரி யாது. பரலோகத்தில் இருக்கிற பிதாவுக்கு மட்டுமே தெரியும் என்று கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிறார். தேவதூதர்களுக்குக் கூட தெரியாது, பிதாவுக்கு மாத்திரமே தெரியும் என்பது உண்மையானால், மனிதன் எப்படி அறிந்து கொள்வான்? கிறிஸ்து மறுபடியும் எப்போது வருவார் என்பதும், நியாயத்தீர்ப்பு எப்போது நடைபெறும் என்பதும் நிச்சயமாக மனிதனுக்குத் தெரியாது. மேலும், தேவன் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த

மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதாலே அதின் நிச்சயமாகவே, அந்த மனுஷன் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து.

பவுல் பேலிக்ஸ்க்கு முன்பாக நின்றபோது,அவருக்கு பிரசங்கம் பண்ணினதாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. பேலிக்ஸ்சும், துருசில்லாளும், விபச்சாரத்தில் இருந்ததாக நமக்கு வசனம் சொல்கிறது. **அவன் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன்** என்றான் (அப். 24 : 25) பேலிக்ஸ் எவ்வகையான வாழ்க்கையை வாழ்ந்து கொண் டிருந்தான் என்பதை அறிந்த பவுல், பேலிக்ஸ் தன்னுடைய செயல்களுக் கெல்லாம் தேவனுக்குப் பதிலளிக்க வேண்டுமென்று சொல்லி பேலிக்ஸை எச்சரிக்க தைரியமுடையவராய் இருந்தார். அப்பொழுது, பேலிக்ஸ் நடுங்கியதில் எந்த ஆச்சரியமும் இல்லை. அது அவனைப் பயமடையச் செய்தது. ஆயினும், அவன் பவுலுக்கு செவிகொடுக்காமல் பவுலிடம், இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயம் கிடைக்கும்போது உன்னை அழைப்பிப்பேன் என்று சொல்லி அனுப்பியது மிகவும் துக்கமானது. நமக்குத் தெரிந்தவரை, பின்பு அவன் அந்நிலையிலேயே மனந்திரும்பி யிருக்க வேண்டும். எவ்வளவு பரிதாபம் !

தன்னுடைய நாட்களில் வாழ்ந்த பக்தியுள்ள ஜனங்களிடத்தில் இயேசு ஆண்டவர் பேசிக் கொண்டிருக்கும்போது, **விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளே எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாத வைகளை எடுத்துக் காட்டுகிறான், மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கெடுப்புவிக்க வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் என்றார்** ( மத்தேயு 12 : 34 - 37 ). அதன் பொருள், ஒருவர் தான் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்டுவதற்கு இவைகளெல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப் பட்டிருக்கிறது. ஒருவர் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் அவை எல்லாவற்றையும் குறித்து ஒரு நாளில் கணக்கு கொடுக்க வேண்டுமென்பது ஒருவருக்கு மனதில் இருக்க வேண்டும். இதை ஒருவர் அறிந்து கொள்வது, அவரை அதிக ஜாக்கிரதையுள்ளவராக்கி ஒரு காரியத்தைப் பேசுவதற்கோ அல்லது செயவதற்கோ முன்பாக ஒன்றுக்கு இரண்டுமுறை சிந்திக்கச் செய்கிறதாக இருக்க வேண்டும்.

- தொடரும்

பெண்கள் பகுதி

# குடும்பங்களின் இன்றைய அத்தியாவசியத் தேவைகள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

முதலாம் நூற்றாண்டில் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தமான விருந்தாளியாக பல வீடுகளுக்குச் சென்றுள்ளார். அவர் சென்ற எல்லா வீடுகளுமே தேவையிலே இருந்தது. தேவகுமாரன் அந்தத் தேவைகளைச் சந்தித்தார். அதே இயேசு கிறிஸ்து இன்றைக்கு நம்முடைய சுகவீனம், பிரச்சினைகள், தீர்வுகள் போன்றவற்றிற்கும் உதவிகள் செய்ய வல்லவராயிருக்கிறார். உண்மைச் சூழ்நிலை என்னவெனில், எல்லா குடும்பங்களுமே பற்பல தேவைகளில் இருக்கிறது. ஆனால், குடும்பங்களுக்கு குடும்பம் தேவைகள் வித்தியாசப்பட்டிருக்கிறது. இது எப்படி உண்மையெனில், சில குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை மையமாக வைத்து அவரைச் சுற்றித் தங்கள் காரியங்களை மேற்கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் தங்கள் குடும்பத்தில் இயேசுவை வெளியே ஒதுக்கி வைத்து விட்டுத் தங்கள் விருப்பம்போல் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

என்னுடைய திட்டமான வலியுறுத்தல் யாதெனில், இன்றைக்கு நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு விடுதலை இயேசுவின் மூலம் மட்டுமே கிடைக்கும். அழகான அந்த ஏதேன் தோட்டத்தில் பிதாவாகிய தேவன் திருமணம் ( குடும்பம் ) என்பதை துவக்கி வைத்தார். அக்குடும்பத்துக்குத் தேவையான மகிழ்ச்சியை தேவன் தெரிந்து வைத்திருந்தார்.

இப்போது நம் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இன்றைய குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகள் என்னவென்பது பற்றிக் காண்போம்.

**“ அன்பு, துணை ” - இன்றைய தேவை**

கணவன், மனைவி ஆகிய இருவருக்குள்ளும் அதிக அன்பும், உறுதுணையும் தேவையாயிருக்கிறதல்லவா? இன்றைக்கு அதிக அளவு குடும்பங்கள் சீரழிகிறதென்றால் இந்த அன்பும் உறுதுணையும் இல்லாததே காரணம். இயேசுவையும், அவர் சொன்ன உபதேசங்களையும் ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் சார்ந்திருந்தால்தான் இரண்டையும் பெற்றுக் கொள்ள முடியும். பரலோக மைந்தனை நம்முடைய குடும்பத்தில் ஒரு

வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாம் ஒருபோதும் பரலோகம் செல்லவே முடியாது. இப்பூலோகத்தின் சொர்க்கமாக திகழ்ந்த ஏதேன் தோட்டத்தில் சிருஷ்டி கர்த்தாவாகிய நம்முடைய தகப்பன் ஆராய்ந்து மனிதன் தனிமையாய் இருப்பதை கவனித்து அது நல்லதல்ல என்கிறார். துணை வேண்டும் என்று நினைத்தார். மோசேயானவன் எழுதும்போது **மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை உண்டாக்குவேன்** என்றார் (ஆதி. 2 : 18).

ஆசையாய் உருவாக்கப்பட்ட அந்தத் துணை, ஆதாமின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக உருவாக்கப்பட்டாள். பெண் உருவாக்கப்பட்ட அந்த அழகான, அற்புதமான விதத்தை வர்ணிக்கும் வகையில் மோசே அதை இவ்வாறு விவரிக்கிறான். அயர்ந்த நித்திரையை வருவித்து விலாவிலிருந்து எலும்பை எடுத்து, அதிலிருந்து பெண்ணை உருவாக்கி அவளை ஆதாமிடம் கொடுத்தார். உடனே ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமும் என்றான் (ஆதி. 2 : 21-24).

ஆனால், பிதா எதிர்பார்த்தபடி இல்லாமல் இந்த அன்பும், துணையும் மாறி வெறுப்பு, பிரிவினை என்பது பாவத்தினால் வந்து சேர்ந்தது. உபா. 24 : 1 - 4 வசனப்பகுதிகளில் கணவன், மனைவி பிரிந்தால் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆதியாகமம் தொடங்கி மல்கியா வரை லட்சணக்கான இஸ்ரயேல் ஜனங்களின் சரித்திரத்தைப் பார்க்கும்போது கணவன், மனைவி அன்பு கெட்டு, பிரிவினை, துரோகம் ஏற்பட்டு விட்டது. தேவன் தம்முடைய தீர்க்கதிரிசிகளைக் கொண்டு கடுமையாக எச்சரித்துக் கொண்டே வந்தார். மல். 2 : 14 - 16 வாசிக்கும்போது தன் இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணாதிருங்கள் என்று எச்சரிக்கிறார். புதிய ஏற்பாட்டில் கணவன் தன் வீட்டை விட்டுப் பிரிந்து தன் மனைவியோடு இசைந்திருக்க வேண்டும் என்று தேவன் சொல்கிறார் (மத். 19 : 4 -6). புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார் (எபே. 5 : 25 ) புருஷர்களும், மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அன்பு கூர வேண்டும் ( எபே. 5 : 28 ) புருஷர்களே உங்கள் மனைவிக்கு செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள் என்று 1 பேதுரு 3 : 7-ல் கூறுகிறார். வாழ்க்கை என்னுடையதல்ல, நம்முடையது என்ற தத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்து, கணவன், மனைவி என்ற மூன்று கோடுகளும், ஒரு முக்கோணம் என்றால், மேல்கோணம் கிறிஸ்துவாகவும், கீழ் இரண்டு கோணங்களும் கணவனும் மனைவியுமாக இருந்தால் அதுதான் சிறப்பானது.

**புனிதம், மெய்ப்பற்று - இன்றைய தேவை**

ஒழுக்கம் கெட்டு, ஒழுக்கத்தை செயல்படுத்துவதென்பது இயலாத ஒன்று. ஆனால், இப்படிப்பட்ட நிலையில் இன்றைய நாட்கள் உள்ளது. ஒரு பெண்ணோ, பையனோ தன் வாலிபத்தை அடையாததற்கு முன்பு கீழ்க்கண்ட வசனங்களை தங்கள் சிந்தையில் கொள்ள வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கிய வான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் ( மத். 5 : 27, 28 ). இயேசு கிறிஸ்து விபச்சாரத்தையும், வேசித்தனத்தையும் ஆரம்பத்திலேயே அடி யோடு அறுக்கச் சொல்லுகிறார். மாற்கு. 7 : 20 -23 ல் மனுஷனை தீட்டுப் படுத்துவது வேசித்தனம் விபச்சாரம் என்கிறார். 1 கொரி. 6 : 18 – 20 ல் வேசித்தனத்திற்கு விலகி யோடுங்கள் என்கிறார். கலாத்தியர். 5 : 19 – 21 ல் விபச்சாரம், வேசித்தனம் மாம்சத்தின் கிரியைகள் என்கிறார். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என்று. 1 தெச. 5 : 22 ல் கூறுகிறார். நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகி மோக இச்சைக்குட்படாமல், தன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டு கொள்ளும்படி அறிந்து இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். கர்த்தர் நீதியை சரிக்கட்டுகிற வராயிருக்கிறார் (1தெச 4 : 3 – 7) என்கிறார்.

**பெற்றோர்கள் பிள்ளைகள் இவர்களுக்கிடையே அன்பு, துணை எவ்வாறு இருக்கிறது!**

பெற்றோர்கள் கிறிஸ்தவ அன்பை பிள்ளைகளுக்குக் காட்ட வேண்டும். பிள்ளைகளுக்காகப் பிள்ளைகளுடன் இருந்து வாழ வேண்டும். பிள்ளைகள் குடும்பத்தை ஆளுகை செய்யாமல், பெற்றோர்கள் பிள்ளைகளை ஆளுகை செய்ய வேண்டும் இது வேதாகமத்தின் கட்டளை. பிள்ளைகளின் தேவைகளை அன்போடு பூர்த்தி செய்ய வேண்டும். நீ பிள்ளையாயிருந்தால், இப்போது பெரியவனாகி தனி குடும்பமாய் இருந்தால், நீ எத்தனை முறை உன் பெற்றோரைப் போய் பார்த்திருக் கிறாய்? எத்தனை முறை பேசியிருக்கிறாய்? அருகாமையில் இருந்தால், கடைசியாக நீ போய் உன் பெற்றோரைப் பார்த்து பேசி, அவர்கள் தேவைகளைச் சந்தித்து எவ்வளவு நாள் ஆயிற்று? இதோ, இன்று நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன் என்று யோசுவா. 23 : 14 – ல் கூறியபடி உங்கள் பெற்றோர்கள் **போகிறதற்குள்ளாகப்** போய் கவனிக்காதபடி உங்கள் அலுவல்கள், நண்பர்கள் காரணமாயிருக்கிறார் களா? நிறையப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் கண்ணை மூடிய பிறகு அவர்கள் அன்பு, துணை இவற்றைப் பற்றி பெரிதாகப் பேசுவார்கள். பரிசுத்த ஆவியானவர் இதைப்பற்றி வேதாகமத்தில் எழுதிக்

கொடுக்கவில்லையா (எபே. 6 : 1 – 2). தாமதமின்றி அவரின் போதனைப்படி நடப்போம். இயேசு கிறிஸ்து நம் அன்பும், துணையும் பலப்படவுமே இவ்வுலகிற்கு வந்தார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் கூடிய சகோதரிகளைப் போலவும் பாவித்து, புத்தி சொல்லு ( 2 தீமோ 5 : 2) என்கிறார். 1 தீமோ. 5 : 22 ன் சட்டமே உன்னை சுத்தவனாகக் காத்துக்கொள் என்பதுதான். பால் சம்பந்தப்பட்ட உறவு என்பது, திருமணம் சம்பந்தப்பட்ட ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இந்த உறவு வேறு எந்த வகையில் கிடைத்தாலும் அது பா-வ-ம் என்ற மூன்றெழுத்திற்குள் அடங்கியே தீரும். குடும்பத்தின் பிரச்சினையென்னவெனில் இந்தப் பாவத்தை கணவன், மனைவி இதில் யாராவது ஒருவர் செய்வதின் காரணமாகத்தான். இயேசு இதைப் பற்றிக் கூறும்போது வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது என்கிறார் (மத். 5 : 32). மத். 19 : 9 லும் இதே காரியத்தை இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறார். நீதி. 9 : 17 யை நாம் வாசிக்கையில் சாத்தான் கூறுகிற அறிவுறைகளைக் கேட்கக்கூடாது என்று ஞானி புத்தி சொல்லுகிறான். திருமணத்தின் மெய்ப்பற்று புனிதத் தன்மை இவற்றிற்கு கிறிஸ்து அதிகாரியாக இருக்கிறார். எனவே, கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றுவோம்.

**மன்னித்தல், தயவு, இரக்கம், கரிசனை இன்றைய தேவை :-**

குடும்பமாயிருந்தாலும், சபையாயிருந்தாலும் மன்னித்தல் என்பது மிக அவசியம். மனுஷனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மன்னியாதிருந்தால் உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத். 6 : 14, 15). ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (கொலோ. 3 : 13). கொலோசே பட்டணத்து மக்கள், குடும்பச் சூழல், குடும்ப உறவு நிலைகளின் மத்தியில் வாழ்ந்தவர்கள். பவுல் மனைவிகளுக்கும், கணவர்களுக்கும், பெற்றோருக்கும் கூறுவதைப் பாருங்கள். மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள் (கொலோ. 3 : 18 – 21).

மன்னிப்பு என்பது ஒன்று, இரண்டு, மூன்று முறை அல்ல, பேதுரு

ஏழுமுறை போதும் என்று நினைத்தபோது, இயேசு கிறிஸ்து ஏழெழுபது முறை (மத். 18 : 22) என்கிறார். இயேசு கிறிஸ்து மத். 17 : 4 ல் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய் குற்றஞ் செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து, நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். இயேசுவைப் பின்பற்றும்போது நம் இருதயம் இளகி மென்மைத்தன்மையை அடைகிறது. இது இன்றைய தேவைதான், அன்பான வார்த்தை தயவை ஏற்படுத்துகிறது. இதைப் பற்றி வேதம் கூறும்போது, ஒருவருக்கொருவர் தயவாயும் இருங்கள் என்கிறது (எபே. 4 : 32). தங்க சட்டம் என்று போற்றப்படுகிற மத் 7 : 12 லும் இதையே நாம் வாசிக்கிறோம். மற்றவர்கள் நம்மீது தயவு, அன்பு, மன்னிப்பு இவைகளை காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கும் போது நாம் இவைகளை முந்தி அவர்களுக்குக் காட்ட வேண்டும்.

இரக்கமும், கரிசனையும் இன்றைய குடும்பங்களின் தேவையா யிருக்கிறது. இது ஏதோ கடையில் வாங்கும் பொருள்கள் அல்ல. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் பரலோகத்தின் தேவனும், இயேசு கிறிஸ்துவும் நம்முடைய குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தையும், இரக்கத்தையும் கட்டளையிடுவார். அப்பொழுது தான் புதிய ஆண்டு நமக்கு சமாதானம் நிறைந்ததாக இருக்கும். ●

---

## ஜனவரி மாத கேள்விகள்

- வானத்தையும் பூமியையும் தேவன் எப்போது சிருஷ்டித்தார்?
- தேவத்துவத்துள் உள்ள மூவர் யார்?
- ஒரு சால்வையைப் போல தேவன் எதை சுருட்டுவார்?
- தேவனை எவ்வாறு தொழுதுகொள்ள வேண்டும்?
- யார் தேவனை அறியான்?
- நாம் அவரைப்போல் எவ்விதத்தில் இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்?
- கர்த்தருடைய முகம் யாரை நோக்கியிருக்கிறது?
- தேவனுடைய மகிமையை எது வெளிப்படுத்துகிறது?
- தேவனிடத்தில் எவ்வளவேனும் என்ன இல்லை?
- யார் மூலமாய் தேவன் நமக்கு கடைசி நாட்களில் திருவுளம் பற்றினார்?

பதில் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 10.2.2017

வாலிபர் பகுதி

# ஆவிக்குரிய காரியங்களில் ஆவலாயிருப்போம்

*சகோ. பென்னி மார்ட்மன்*

**வா**லிப நெஞ்சங்களே உங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய நாட்களில் வாலிபர்கள் ஆவிக்குரிய காரியங்களில் அதிக ஈடுபாடு இல்லாமல் இருப்பதை நாம் காண முடியும். அவர்களுடைய சிந்தனையும், செயலும் சரீரப்பிரகாரமான காரியங்களில் தான் இருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் வாலிபர்கள் ஈடுபடுவதற்கு நெகேமியா நிச்சயமாகவே ஒரு தூண்டுகோலாக இருக்கிறார். முதலாவது நாம் **நெகேமியா** என்கிற வேதாகம கதாபாத்திரத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம். நெகேமியா என்பதன் பொருள் **யெகோவாவின் ஆறுதல்**. இந்த நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவுக்கு பானபாத்திரக்காரனாக சேவை செய்து கொண்டிருந்தார். அவர் பெர்சியா நாட்டின் தலைநகராயிருந்த சூசானில் உள்ள அரண்மனையில் இருந்த போதிலும் எருசலேமைப் பற்றியும், அங்கே தேவனுக்கடுத்த காரியங்களிலும் அவர் எப்படி அக்கறை உடையவராக இருந்தார் என்பது பற்றி நாம் பார்க்கலாம்.

## I நெகேமியாவின் துக்கம்

நெகேமியா சூசான் அரண்மனையில் பானபாத்திரக்காரனாகப் பணி புரிந்து கொண்டிருக்கும் போது, எருசலேமில் தன்னுடைய ஜனங்களாகிய யூதர்களைப் பற்றி யூதாவிலிருந்த சில மனிதர்களால் குறிப்பாக தன்னுடைய சகோதரரில் ஒருவனாயிருந்த ஆனானி மூலமாகக் கேள்விப்பட்டு அதிக துக்கமடைந்தார். இடிக்கப்பட்ட எருசலேம் மதில்கள் கட்டப்படாமல் கிடந்தது இன்னும் அதிக துக்கத்தை அவருக்கு ஏற்படுத்தியது. நெகேமியா 1 : 1 – 4 வசனங்களில் நாம் நெகேமியாவின் துக்கத்தையும் இஸ்ரவேலின் துரதிஷ்டமான நிலையையும் காணலாம். இந்த வசனப்பகுதியை நாம் படிக்கும்போது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இது போன்று இரக்கமும், அக்கறையும் காட்டும் வசனப்பகுதிகள் நம்முடைய நினைவுக்கு வருகின்றன எரேமியா 9 : 1; ரோமர் 9 : 1 – 3. மேலும், இந்த வசனப் பகுதிகள் தேவனுடைய ஜனங்கள்

மீதும், தேவனுடைய காரியங்கள் மீது தேவதாசர்களுக்கு இருந்த அக்கறையைக் காட்டுகிறது. இன்றைய நாட்களில் வாலிபர்கள் கவலை இல்லாத வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக சந்தோஷத்தை நாடிச் செல்லுகிறார்கள். ஆனால் வாலிபர்கள் அழிந்து போகின்ற ஆத்துமாக் களைக் குறித்து அக்கறை உயைவர்களாகக் காணப்பட வேண்டும்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த போது பாடுகள் நிறைந்த மனிதனாக வாழ்ந்தார் என்று வேத வசனங்களில் நாம் காண்கிறோம். ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் நாம் இதைத் தெளிவாக வாசிக்க முடியும். நாம் இந்த உலகத்தில் கிறிஸ்துவினிமித்தம் பாடுபட்டால், துயரப்பட்டால் நாம் பாக்கியவான்களாயிருப்போம். நமக்கு பரலோகத்தில் ஆறுதல் உண்டு. இந்த உலகத்திலேயே நாம் ஆறுதல் அடைவோம். சரி, இப்போது நெகேமியாவில் மிகுந்த துக்கத்திற்கான காரணங்களைப் பார்ப்போம். நெகேமியா பெர்சியா ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவின் பானபாத்திரக் காரனாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் முதன் முறையாக ராஜாவின் சமூகத்தில் துக்கமாயிருந்தார். பெரிய ராஜாவுக்கு சேவை செய்கிறவர்கள் ராஜாவுக்கு முன்பாக முழு சந்தோஷத்துடனே காணப்பட வேண்டும். இல்லையெனில் மரணம் அல்லது வேலை இழப்பு போன்ற துரதிருஷ்டமான நிலைக்கு தள்ளப்படுவார்கள். இதை நெகேமியா நன்றாக அறிந்திருந்தபடியால் ராஜா நெகேமியாவைப் பார்த்து " நீ துக்கமா யிருக்கிறது என்ன? என்று கேட்டபோது தான் மிகவும் பயந்ததாக நாம் நெகேமியா 2 : 2ல் வாசிக்கிறோம். அர்தசஷ்டா ராஜா நெகேமியாவின் குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தபடியால் நெகேமியாவிடம் பிரியமாகவே இருந்தார். மேலும், நெகேமியா வியாதியாயிருக்கவில்லை என்பதை அறிந்திருந்த ராஜா நெகேமியாவுக்கு ஏதோ மனதின் துக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு காரியம் என்னவென்று மென்மையாக அவரிடம் வினவினார். ராஜாவின் சாந்தமும் இரக்கமும் சம்பாஷணைக்கு வழி வகுத்தது. நெகேமியா பரலோகத்தில் தேவனை நோக்கி ஜெபித்தபிறகு அந்த சம்பாஷனை அல்லது உரையாடல் தொடங் கியது. உண்மையிலேயே இந்த நெகேமியா புத்தகம் முழுவதும் நெகே மியா தான் ஒரு ஜெப வீரன் என்பதை நிரூபித்திருக்கிறார். நெகேமியா எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டு அதின் மதில்கள் இடிக்கப்பட்டு கட்டப்படாமல் இருந்ததினால் துக்கமாக இருந்தார் என்று பார்த்தோம் அல்லவா? இப்போது எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணியைப் பார்ப்போம். "

**II எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணி**

நேபுகாத்நேச்சாரின் பத்தொன்பதாம் வருடம், ஐந்தாம் மாதம் ஏழாம்

நாளில் அவனுடைய இராணுவ தளபதி நெபுசராதான் எருசலேமுக்கு விரோதமாக அனுப்பப்பட்டான். அவன் தேவாலயத்தையும், ராஜாவின் வீட்டையும் எரித்துப்போட்டான். மேலும் இவன் எருசலேம் பட்டணத்தின் மதில்களை இடித்துப்போட்டான் (2 இராஜாக்கள் 25 : 8 – 21). இந்த இடிந்து போன மதில்கள் கட்டப்படாமல் கிடந்ததால் தான் நெகேமியா துக்கமாக இருந்தார். இந்த மதில்களைக் கட்டி எழுப்புவதற்கு ராஜாவிடமிருந்து அனுமதி பெற்றுக் கொண்டு எருசலேமுக்குச் சென்றார். நெகேமியா வேலை தொடங்குவதற்கு முன்பு ஆயத்த வேலைகளைச் செய்தார். அது நகரத்தை சோதனை செய்வது உட்பட அநேகக் காரியங்களை உள்ளடக்கியது (2 : 12 – 15). தேவாலயத்தைக் கட்டுவதற்கான பொருள்கள் பற்றி தான் நன்கு அறிந்தவராய் யூதர்களுக்கும், ஆசாரியர்களுக்கும் , பிரபுகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் வேலையாட்களுக்கும் நன்கு பரிச்சயப்பட்டிருந்தார். மதில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது எத்த னையோ எதிர்ப்புகள் வந்தது அவைகளைக் கண்டு நெகேமியா துவண்டு போகவில்லை. மதில்கள் கட்டி முடிக்கப்பட்டபோது நெகேமியாவின் எதிரிகள் அந்தக் கிரியை தேவனால் கைகூடி வந்ததென்று அறிந்து கொண்டார்கள்.

### III நெகேமியாவிடமிருந்து பாடங்கள்

பொதுவாக தேவனுடைய வேலைகளில் ஒருவர் அக்கறை கொண்டு அதை நடைமுறைப்படுத்த தன்னை ஈடுபடுத்தும் போது சாத்தான் எவ்விதத்திலாவது அவரை சோர்வடையச் செய்வான். எப்படியாவது தேவனுடைய வேலையைத் தடுப்பதில் அவன் கெர்ச்சிக்கிற சிங்கமாக சுற்றித் திரிகிறான். நெகேமியா மதில்களைக் கட்டினபோது சாத்தான் எத்தனையோ தடைகளைக் கொண்டு வந்தான். ஆனால், எல்லா தடைகளையும் தேவனுடைய உதவியால் தகர்த்தெறிந்தார். நெகேமியா பிரச்சனைகள் வந்த போதெல்லாம் அவர் ஜெபித்தார் (நெகேமியா 4 : 1 – 5, 9 ); அவர் எதிரிகளோடு சமரசம் செய்து கொள்ளவில்லை. நெகேமியா எதிரிகள் மீது கண்ணை வைத்துக் கொண்டே வேலையாட்களை உற்சாகப்படுத்தி மதில்கள் ஐம்பத்திரண்டு நாட்களில் கட்டி முடிக்கப்படும்படி செய்தார். நெகேமியா என்கின்ற மனிதனுக்குள் காணப்பட்ட ஒவ்வொரு குணாதிசயங்களும் நம் ஒவ்வொருவருக்குள்ளும் காணப்பட வேண்டும். நெகேமியா எப்படி பாழாய்க் கிடந்த மதில்களை கட்டி எழுப்ப மக்களை ஒன்று திரட்டி அவர்களை உற்சாகப்படுத்தி மதில்களைக் கட்டி எழுப்பினாரோ, அது போல நாமும் கூட ஜனங்களை தேவனிடத்தில் கொண்டு செல்லும் பணியை மேற்கொள்ள வேண்டும். நமக்கு முன்னால் இருக்கும் பணியை எப்பாடு பட்டாவது செய்து முன்னேறுவோம். கர்த்தருடைய வேலைகளை கூட்டாகச் சேர்ந்து செய்வோம். “ எழுந்து கட்டுவோம் வாருங்கள் ” தேவன் நிச்சயமாக நமக்கு வெற்றியைத் தருவார்.

●

சிறுவர் பகுதி

# ஆத்துமா

Bro. ஏபில் நாயகம்

அன்பான சிறு உள்ளங்களே! உங்கள் அனைவருக்கும் 2017 –ம் ஆண்டிற்கான வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய வருடத்தில் அடியெடுத்து வைத்திருக்கும். உங்களுக்கு நம் உடலின் மேன்மை பற்றி கொஞ்சம் கற்றுக் கொடுக்கலாம் என்று இப்பாடத்தை உங்கள் முன் வைக்கிறேன்.

எப்பொழுது ஒரு மனிதன் தன் ஆத்துமாவைப் பெற்றுக் கொள் கிறான்? வேதாகமத்தில் யாக்கோபு என்ற ஆசிரியர் மூலமாக ... ஆவி யில்லாத சரீரம் செத்தாயிருக்கிறது. (யாக். 2 : 26) என்று வாசித்து அறிந்து கொள்கிறோம். அதாவது, ஆவி இல்லையென்றால் சரீரம் உயிர் வாழ முடியாது.

எப்பொழுது ஓர் உயிர் உண்டாகிறது? இதற்குப் பதில் மிகவும் எளிமையானது. கருவில் ஓர் உயிர் உருவாகிறது. ஓர் உயிர் கருவில் உண்டானவுடன் அது உயிர் பெற்று விடுகிறது. அதாவது, வாழ ஆரம்பித்து விடுகிறது. விஞ்ஞான உண்மைகளை வைத்து கருவில் உள்ள உயிர் உயிருடன் இருக்கிறதா என்று கண்டு கொள்ளலாம்.

**இதுபற்றிய சில உண்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.**

- கரு உருவாகி மூன்றாம் வாரத்தில் குழந்தையின் இருதயம் உருவாகி 21, 22 – ம் நாளில் இருந்து இதயம் சுருங்கி விரிய ஆரம்பித்து விடுகிறது. 22, 23 ம் நாளில் இருந்து நரம்புக் குழாய் வளர ஆரம்பிக்கிறது.

- இரண்டு மாதத்தில், இதயம் நன்றாக துடிக்க ஆரம்பித்து மருத்துவர்கள் ஸ்டெதஸ்கோப்பில் கேட்கும் அளவு துடிக்கிறது. 5ம் வாரத்தின் இறுதியில் இதய அறைகள் பிரிக்கப்பட்டு விடுகிறது.

- கருத்தரித்து 40ம் நாளில் மூளையின் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டு மின்சாரஅலைகள் மூளையில் பதிவு செய்யப்படுகிறது.

- 26 – 27 ஆகிய நாட்காலத்தில் சுவாச மண்டலம் உருவாக்கப்படுகிறது. அதாவது, தொண்டைக் குழாய், மூச்சுக் குழாய், காற்றறைகள், நுரையீரல் போன்றவை உண்டாகிறது.

❊ நான்காம் வாரத்தின் ஆரம்பத்தில் கல்லீரல், கணையம், பித்த நீர்பை போன்றவை உருவாகிறது.

❊ இரண்டு மாத காலத்தில் கரு முழு வளர்ச்சியடைந்து அந்தந்த உறுப்புகள் அந்தந்த இடத்தில் உருவாகி விடுகிறது (பாதம், கை, தலை, உறுப்புகள் முதலியன). கைவிரல்கள் கூட உருவாகி விடுகிறது. ஒரு அங்குலத்திற்கு குறைவான நீளமாக இருக்கும்போதே கருவானது தலை, கண், காது, சிறிய உணவு மண்டலம், சிறுநீரகம், கல்லீரல், துடிப்புள்ள இதயம், இரத்த மண்டலம், மூளை வளர்ச்சி இவைகளைப் பெற்றுவிடுகிறது.

❊ குழந்தை பிறக்கும் முன் வயிற்றில் இருக்கும்போதே துள்ளுகிறது. பெருவிரலை சப்புகிறது. தூங்குகிறது, தூங்கி எழுகிறது.

❊ தொடு உணர்வு, வலி, குளிர், ஒலி, ஒளி இவைகளை உணர்கிறது பிறக்கும் முன்பே.

❊ இத்தனை குணங்களையும் உடைய ஒரு குழந்தை உயிருடன் தான் இருக்கிறதா? கட்டாயமாக. இத்தனை அதிசயங்களை செய்து கொண்டிருக்கும் ஒரு கரு கட்டாயமாக உயிருடன் தான் இருக்கிறது.

பிறக்காததற்கு முன்பே இருக்கும் இக்கருவைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார்? அவருடைய பார்வை எப்படியிருக்கிறதென்று பார்ப்போம் வாருங்கள்!!

நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார் (எரேமியா 1 : 5). பிறக்காததற்கு முன்னே தேவன் அக்குழந்தையை ஒரு தீர்க்கதரிசியாகக் கண்டு அதை பரிசுத்தம் பண்ணியிருக்கிறார். ஒருவேளை அவன் தாய் அக்கருவை சிதைத்திருப்பாள் என்று சொன்னால், அவள் ஒரு தீர்க்கதரிசியைக் கொலை செய்திருக்கிறாள் என்று தான் பொருள். தேவன் ஒருவனை உயிருள்ளவனாகப் பார்க்கையில் அதைக் கொன்ற பாவத்துக்கு ஆளாயிருந்திருப்பாள்.

இதே உண்மை ஏசாயா தீர்க்கதரிசியின் வாழ்க்கைக்கும் பொருந்தும். " .... தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப்

பிரஸ்தாபப்படுத்தினர்.... நான் தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார்" (ஏசாயா 49 : 1, 5).

இதையே தாவீது சொல்லும் போது மிகத் தெளிவாக கர்ப்பத்தில் இருக்கும் கருவைப்பற்றி அதற்கு உயிர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். என் தாயின் கர்ப்பத்தில் என்னை காப்பாற்றினீர். நான் **பிரமிக்கத்தக்க அதிசயமாய்** உண்டாக்கப்பட்டேன். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டேன். பூமியின் தாழ்விடங்களில் விசித்திர விரோதமாய் உருவாக்கப்பட்டேன். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. (சங். 139 : 13 - 16).

வேதாகமம் தெளிவாகச் சொல்லுகிறது ஒரு உயிர் தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே உயிர் பெற்று விடுகிறது. எனவே, யாக்கோபு ஆசிரியர் சொன்ன ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கும் என்ற வசனத்தின்படி ஆவியுள்ள சரீரம் உயிரோடிருக்கும் என்பது நமக்கு தெளிவாகிறது. எனவே, உயிருள்ள ஒரு சரீரத்தில், அதாவது கருவில் உயிர் உண்டாகும் போதே ஆன்மா உண்டாகி விடுகிறது.

எனவே சரீரம், ஆன்மா உண்டாகுதல் இரண்டுமே ஒரு குழந்தை கருவில் இருக்கும்போதே தேவனால் உருவாக்கப்படுகிறது.

அருமையான பிள்ளைகளே! ஆத்துமா முக்கியம் என்பதை அறிந்து கொண்டோம். எனவே இப்புதிய ஆண்டில் நம் ஆத்துமாவை வாழ வைப்போம்.

மனப்பாட வசனம் :- " பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் " (III யோ. 2). ●

## சுவிசேஷம் பூரணமானது

- பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது. (யோவான் 14 அதி. 16 அதி)
- நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோவான் 12 : 48)
- ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் உள்ளடக்கியது. (II பேதுரு 1 : 3)
- குறைவற்றது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. (சங் 19 : 7)
- கூட்டவும், குறைக்கவும் அவசியமில்லாதது. (வெளி 22 : 18, 19)
- இரட்சிப்பை தரத்தக்கது. (ரோமர் 1 : 14 – 16)
- ஒரு போதும் ஒழிந்து போகாதது. (மத். 5 : 18)

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி : எந்தப் பாவங்களை ஞானஸ்நானம் கழுவுகிறது?**

**பதில்** : முதலாவது ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கானது ( அப். 2 : 38 ). இந்தப் பாவமன்னிப்பு பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் மத உலகில் உண்டு. 1. ஞானஸ்நானம். ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக வரை அவர் செய்த எல்லாப் பாவங்களைக் கழுவுகிறது. 2. வேறு சிலர் ஞானஸ்நானம் ஒருவருடைய கடந்தகால, நிகழ்கால, வருங்கால பாவங்களையும் கழுவுகிறது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இது குறித்து பார்ப்போம்.

1. ஞானஸ்நானம், ஒருவர் ஞானஸ்நானத்திற்கு முன்பாகச் செய்த பாவங்களைக் கழுவுகிறது. உதாரணமாக, தர்சு பட்டணத்து சவுலின் மனமாற்றத்தை எடுத்துக்கொள்ளுங்கள் ( பின்பு, அப்போஸ்தலனாகிய பவுல் என்று நன்றாக அறியப்படுகிறார் ). “ இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன ? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் ” ( அப். 22 : 16 ). ஞானஸ்நானம் பெறும் ஒருவர் இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார் ( ரோமர் 6 : 3, 4 ). நிச்சயமாகவே கிறிஸ்து தமது மரணத்தின் போது தான் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார் ( யோவான் 19 : 34 ). மேலும், “ நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தித்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார் ” ( வெளி. 1 : 6 ). இவ்வசனத்தில், ஞானஸ்நானத்தால் பாவங்கள் கழுவப்படுவதும், கிறிஸ்து வின் இரத்தத்தால் பாவங்கள் கழுவப்படுகிறது என்பதும் ஒன்றைத்தான் குறிக்கிறது. ஆகவே, ஞானஸ்நானத்தின் மூலமாக, கிறிஸ்தவரல்லாத ஒருவர் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு இரட்சிக்கப்படுறார்.

2. இருந்தபோதிலும், ஒருவர் ஞானஸ்நானம் பெற்றுவிட்டபடியால், அவர் இரட்சிப்பை ஒரு போதும் இழந்துபோக முடியாது என்று பொருள்படாது. அதாவது, மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தார் சொல்வது போல் “ இரட்சிக்கப்பட்ட ஒருவர் எப்போதுமே இரட்சிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார் ” என்னும் உபதேசம் தவறானது. ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்தால் ஞானஸ்நானத்திற்குப் பிறகுகூட இழந்துபோக முடியும்.

ஆயினும், கிறிஸ்தவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட முடியும் ( அப். 8 : 22 ). அந்த மன்னிப்பானது ஞானஸ்நானத்தின் மூலமாக இல்லாமல், பாவத்தை ஒப்புக்கொள்வதாலும், அதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் இரக்கத்தைப் பெறுவதாலும் வருகிறது. நமக்குப் பாவமில்லையென் போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திக்கரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் ( I யோவா 1 : 7 – 9 ). ஆகவே, ஞானஸ் நானத்திற்குப் பிறகான பாவமன்னிப்பிற்கு, ஞானஸ்நானத்தோடுகூட இருக்கும் ஒரே உறவு, ஒருவர் தான் செய்த பாவத்திலிருந்து மனந்திரும்புவதற்கும், ஜெபிப்பதற்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் முன்பாக ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும் ( அப். 8 : 22 ).

# ஆராதனை மற்றும் ஜெபம் செய்வதினால் என்ன பிரயோஜனம்?

Bro. பாண்டியன்

கிறிஸ்துவுக்குள்ளான தேவ பிள்ளைகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவசித்தமாய் இருந்தாலும் தேவனை அறிய விரும்பாத ஜனங்களும் அநேகர் உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆகையால் தான் பேதுரு; உங்களில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் என்கிறார். அதைக்குறித்து நம் ஆண்டவர் குறிப்பிடும்போது, பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகளுக்குமுன் போடாதேயுங்கள் என்கிறார். தேவதாசன் யோபு சாத்தானால் உபத்திரவமடைந்தபோது, இவ்வுலகில் பாவிகள் சுகமாய் வாழ்வதைப் பார்த்து இப்படியாகப் புலம்புகிறார். **அவர்கள் தேவனைப் பார்த்து, எங்களை விட்டு விலகியிரும்; உம்முடைய வழிகளை அறிய விரும்போம்; சர்வ வல்லவரை நாம் சேவிக்க அவர் யார்? அவரை நோக்கி ஜெபம் பண்ணுவதினால் நமக்குப் பிரயோஜனம் என்ன?** என்கிறார்கள் (யோபு 21 : 14, 15). அதே சமயம் அப்படி மேன்மையாகப் பேசுபவர்கள், சடுதியில் அழிந்து போவார்கள் என்றும் தம்மைத் தேற்றிக் கொள்கிறார். இவ்வுலக வாழ்வை மட்டும் நோக்கிப் பார்க்கிறவர்களுக்கு நல்லவர்கள் கஷ்டப்படுவதைப் போலவும், தீயவர்கள் சுகமாயிருப்பதைப் போலவும் தென்படலாம். ஆனால், மறுமையைக் கணக்கில் எடுக்கும்போது இது கொஞ்சகால பாடு என்று பேதுரு குறிப்பிடுவதே சரியாகும் (1 பேதுரு 5 : 10). எனவே, தேவனை ஏன் சேவிக்க வேண்டும்? ஜெபத்தினால் பலன் என்ன? என்பதைக் குறித்துப் பார்ப்போம்.

மனிதன் தேவனை சேவிக்க வேண்டியதின் முக்கியக் காரணம், **தேவன் அவனை உண்டாக்கியவர்** என்பது. யோபுவின் புலம்பலுக்கு அவன் நண்பன் எலிகூ பதில் சொல்லும்போது:- பூமியின் மேல் மனுஷனுக்கு அதிகாரம் கொடுத்தவர் தேவனே! மனுஷனுடைய செய்கைக்குத்தக்கதை அவனுக்குச் சரிகட்டி, அவனவன் நடக்கைக்குத் தக்கதாக அவனவனுக்குப்

பலனளிக்கிறார் (யோபு 34 : 9 - 13) என்றார். தேவன் பதில் செய்வதையே இவ்வுலக ஜனங்கள், **கெடுவான் கேடு நினைப்பான், முற்பகல் செயின் பிற்பகல் விளையும் நீ என்ற சொற்றொடர்களின் மூலம் குறிப்பிடுவதை நாம் காண்கிறோம். நியாயப்படி பார்த்தால் மனிதனே தேவனை எங்கே என தேடவேண்டும் என்கிறார் எலிகூ.** பூமியின் மிருகங்களைப் பார்க்கிலும் எங்களைப் புத்திமான்களும், ஆகாயத்துப் பறவைகளைப் பார்க்கிலும் எங்களை ஞானவான்களுமாக்கி என்னை உண்டாக்கினவரும் அருள் செய்கிறவருமாகிய என் சிருஷ்டிக் கர்த்தாவாகிய தேவன் எங்கே என்று கேட்பவன் ஒருவனுமில்லை! ( யோபு 35 : 10, 11 ). ஆனால் இவ்வுலக முட்டாள் விஞ்ஞானிகளோ குரங்கிலிருந்து மனிதன் வந்திருக்கலாம் என்று உளறிக் கொண்டிருக்கிறார்கள்!

**1. தேவன் தந்த விடுதலை அல்லது இரட்சிப்புக்காக நாம் அவரை சேவிக்கின்றோம் :-**

பொதுவாக தான் பாவி என்பதையே மனிதன் உணராமல் இருக்கிறான். ஆனால் கிறிஸ்துவின் உபதேசம் மனிதன் பாவத்தில் இருக்கும் அவலத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றது. மட்டுமல்ல கிறிஸ்து, பாவம் செய்கிறவன் பாவத்திற்கு அடிமையாய் இருக்கிறான் என்றும், அவருடைய சத்தியத்தினால் மட்டுமே அவன் விடுதலையாகக்கூடும் என்றும் தெரிவிக்கின்றார். அநேகர் புதிய ஆண்டில் தீய பழக்க வழக்கங்களை விட்டுவிட தீர்மானம் செய்வார்கள். ஆனால் மறுபடியும் அவற்றில் சிக்கி சீரழிகிறார்கள். ஒருவன் கிறிஸ்துவை பின்பற்றும் போது மட்டுமே அவரின் உதவியால் அத்தகைய தீய பழக்கங்களில் இருந்து விடுதலை பெற முடியும். முன்பு இஸ்ரயேல் ஜனம் தேவனை சேவிக்க முக்கியக் காரணம் அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை ஆக்கப் பட்டதுதான் ( 2 ராஜா 17 : 36 ). அதுபோல நம்மையும் தேவன் இந்த பொல் லாத உலகிலிருந்து ரட்சித்து, நரகத்தில் அழியாதபடி சபையில் சேர்த்துக் கொண்டதால் நாம் தேவனை சேவிக்கின்றோம்.

**2. தேவன் நமக்காகச் செய்த பிராயச்சித்தத்திற்காக நாம் அவரை சேவிக்கின்றோம் :-**

இஸ்ரயேல் ஜனம் தேவனை சேவிக்கும்படி ஒரு இடத்தை நாடிச்செல்ல வேண்டி இருந்தது. மோசே சொல்லும் போது, " அங்கே உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், தசம பாகங்களையும்,

பொருத்தனைகளையும், உங்கள் உற்சாக பலிகளையும், ஆடு, மாடு களின் தலையீற்றுகளையும் கொண்டு வரவேண்டும் என்கிறார் (உபா 12 : 6). எசேக்கியா ராஜா காலத்தில் ஜனங்கள் 600 காளைகளையும், 3000 ஆடுகளையும் கொண்டு வந்து தேவனைப் பணிந்து கொண்டார்கள். ஆனால், நாம் சேவிக்கும் தேவாதி தேவன் தம்முடைய நேச குமாரனையே சிலுவையில் நமக்காகப் பலியிடப் பண்ணினதால் நமக்கான பிராயச்சித்தம் உண்டானது. தற்போது நம்முடைய உதடுகளின் காளைகளை நமதாண்டவர் இயேசுவின் மூலம் எப்போதும், தேவனுக்கு செலுத்த முடிகிறது ( ஓசியா 14 : 2 - எபி 13 : 15 ). அந்தப் பிராயச்சித்தத் திற்காக நாம் தேவனை சேவிக்கின்றோம்.

### 3. நமக்குப் பிரயோஜனமானதைப் போதிக்கிறதினால் நாம் தேவனை சேவிக்கின்றோம்! (ஏசா 48 : 17, 18).

உலகக் கல்வியில் ஒரு மனிதன் எவ்வளவு தேறினாலும் அவனுக்கு நற்குணங்கள் ஏற்படுவதில்லை. அதினால் அது பிரயோஜனமற்றதாகவே கருதப்படும். **நான் உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துவேன். உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்** என்கிறார் நம் தேவன். மனுஷர் உள்ளத் திலிருப்பதையெல்லாம் நமதாண்டவர் இயேசு அறிந்திருந்தபடியினால் நாம் வாழவேண்டிய நெறிமுறைகளை உபதேசங்களாகப் போதித்தார். என் உபதேசம் என்னை அனுப்பின பிதாவினுடையது என்றார் இயேசு. எனவே ஒருவன் நல்லவனாக குணத்தில் மாற்றம் அடைய தேவஞானம் தேவைப் படுகிறது. அதை நமக்குப் போதிக்கிற தேவனை நாம் சேவிக்கின்றோம்.

### 4. நம்முடைய ஆபத்தில் நமக்கு உதவிசெய்வதால் நாம் தேவனை சேவிக்கின்றோம். சங் 50 : 14, 15.

" நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, பொருத்தனைகளைச் செலுத்தி; ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப் படுத்துவாய் " என்கிறார் நம் தேவன். அநேகருக்கு உலகில் ஆபத்தில் உதவிசெய்ய யாருமில்லை என்பதே உண்மை. அவர்கள் எதிர்பார்க்கும் மனுஷரின் உதவி குறைபாடு உள்ளது. வாழ்க்கையில் சரீரப் பிரகாரமாக, மனதளவில் என்று நாம் அநேகப் பிரச்சனைகளை, சோதனைகளை கடந்து செல்ல வேண்டியுள்ளது. அந்நேரமெல்லாம் நாம் சேவிக்கும் நம் தகப்பன் நம்மை பெலப்படுத்தி திடன்கொள் என்று நம்மை அரவணைத்து, பாதுகாத்து வழி நடத்துகிறார்.

அதனால் தான் நாம் ஸ்தோத்திர பலியிட்டு அவரை மகிமைப்படுத்து கிறோம். இது அநேகருக்குக் கிடைக்காத சிலாக்கியமாகும். எனவே சபை கூடுதலை விட்டுவிடாமல் தேவனை மகிமைப்படுத்துவோமாக. உங்களைப் பற்றி தேவன் பெருமையாகச் சொல்வதைக் கவனியுங்கள்;–**அவன் என்னிடத்தில் வாஞ்சையாய் இருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்! என் நாமத்தை ( வல்லமையை ) அவன் அறிந்திருக்கிறபடியால் உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் கூப்பிடுகையில் மறு உத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன்** " என்கிறார் (சங் 91 : 14, 15).

### 5. அவர் தருகிற ஆசீர்வாதங்களுக்காக நாம் அவரை சேவிக்கின்றோம்!

எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் நமது தேவன் கொடுக்கிறபடியினால் மனுஷர் அவரை சேவிக்கக் கடமைப் பட்டுள்ளனர். கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபின்பு யோசுவாவும் ஜனங்களும் " நானும் என் வீட்டாருமோ என்றால் கர்த்தரையே சேவிப்போம் " என்று தீர்மானம் செய்தனர். ஆனால், ஜனங்கள் அதில் உறுதியாய் நிலைத்திருக்கவில்லை. நியாயப்பிரமான காலத்தின் முடிவிலும் ஜனங்கள், **தேவனை சேவிப்பது விருதா; அவருடையக் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதனால் என்ன பிரயோஜனம்?** என்று தேவனுக்கு விரோதமாகப் பேசினார்கள் ( மல்கியா 3 : 14 ) மோசே அவர்களிடம் கூறும்போது, நீங்கள் கையிட்டு செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப் படுவீர்களாக என்றார் (உபா 12 : 7).

அநேகர் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வங்களை விதவிதமான வியாதிகளின் பெயர்களால் டாக்டர்களுக்கும், வீம்பு மற்றும் மேட்டிமை காரணத்தால் வக்கீல்களுக்கும் செலவழித்துப் புலம்பிக் கொண் டிருக்கிறதைப் பார்க்கிறோம். ஏழைகளுக்கு இரங்காமல் சேர்த்து வைக்கும் செல்வம் வீணாகத்தான் போகும். ஆனால், நம்முடைய கைகளின் பிரயாசங்களை நாமே சாப்பிடும்படியான பாக்கியத்தைத் தந்த தேவனை நாம் நிச்சயமாகவே சேவிக்க வேண்டுமல்லவா? (உபா 26 : 10, 11). எனவே நாம் மற்றவர்களைப் போல் காரணமில்லாமல் கட்டாயத்திற்காக நம் தேவனை ஆராதிக்கவில்லை. தேவனை சேவிப்பது ஒரு நன்றியுள்ள உள்ளத்தின் வெளிப்பாடு! ஆகையால் தான் இரட்சிக்கப்பட்டவர்கள் வாரந்

தோறும் உற்சாகமாக சபைகூடி தேவனைத் தொழுதுகொள்கிறார்கள். தேவனை சேவிப்பது ஒரு இன்பமான அனுபவம்.

**சங்கீதக்காரன் பாடியுள்ளதைக் கவனியுங்கள்:**

சேனைகளின் கர்த்தாவே உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள். உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் எப்போதும் உம்மைத் துதித்துக் கொண்டிருப்பார்கள் (சங் 84 : 1, 4).

அடுத்ததாக நம் தலைப்பு வசனத்தில், " அவரை நோக்கி ஜெபம் பண்ணுவதினால் நமக்குப் பிரயோஜனம் என்ன? என்ற கேள்வியைப் பார்த்தோம். மனிதனின் கீழ்படியாமையும், அவனுடைய பாவ அக்கிரமங்களும் தேவனை சங்கடப்படுத்துகிறது! ( ஏசா 43 : 24 ). நம்முடைய பாவ மன்னிப்புக்காகவும், நம் தேவைகளுக்காகவும் நாம் தேவனிடம் ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நாம் ஜெபிக்கும் போது அவரைத்தவிர யாரும் உதவமுடியாது என்ற நம்பிக்கையோடு கேட்பதால் நாம் அவரைக் கனப்படுத்துகிறோம். தேவன் இஸ்ரயேல் ஜனங்களைப் பார்த்து ஏன் உபயோகமற்ற பொருளுக்காக, உணவுக்காக வீணாக செலவு செய்கின்றீர்கள்? நீங்கள் " உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள், அப்பொழுது உங்களை ஆசீர்வதிப்பேன் " ( ஏசா 55 : 1 - 3 ) என்று அழைப்பு விடுத்து ஆலோசனை கூறினார். கிறிஸ்துவின் சபையில் அப்போஸ்தலர் உபதேசத்திலிருக்கும் தமக்கும் இப்படிப்பட்டதான அநேக ஆலோசனைகள் இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஜெபம் யாருக்கெல்லாம் எப்படி பயனளித்தது என்பதை வேதம் முழுதும் நாம் காணலாம்.

ஆபிரகாம் லோத்துக்காக ஜெபித்த போது அவன் உயிர் தப்பினான். (ஆதி 18 : 23).

ஈசாக்கு தன் மனைவியின் மலட்டுத் தன்மைக்காக ஜெபித்த போது அவனுக்கு இரட்டைக்குழந்தை ஆசீர்வாதம் கிடைத்தது. (ஆதி 25 : 21).

யாக்கோபு இரவெல்லாம் போராடி ஜெபித்ததில்லை ஏமாற்றுக்காரன் என்ற அவன் பெயர் இஸ்ரயேல் என்று மாற்றப்பட்டது. (ஆதி 32 : 26).

மோசேயின் ஜெபத்தால் ஒவ்வொருமுறையும் வாதைகள் நிறுத்தப்பட்டது. செங்கடல் இரண்டாகப் பிளந்தது, கன்மலையில் தண்ணீரும், வனாந்திரத்தில் உணவும் இறைச்சியும் கொடுக்கப்பட்டது.

அன்னாளின் மனமுருகும் வேண்டுதலினால் ஒரு தீர்க்கதரிசி சாமுவேல் கிடைத்தான்.

சாமுவேலின் ஜெபம் ஓர் ஆயுதமும் இல்லாமல் எதிரிகளை விரட்டியது (1 சாமு 7 : 9,10).

தாவீதின் ஜெபங்கள் அருமையான சங்கீதங்களாய் இன்றும் நம் ஆத்துமாவைத் தாலாட்டி, சீராட்டிக் கொண்டிருக்கிறது.

நம்மைப் போல பாடுள்ள மனுஷன் எலியா ஜெபித்தபோது மழை யில்லாதபடி பஞ்சமும், மறுபடி ஜெபித்தபோது மழைபெய்து செழிப்பும் வந்தது (யாக் 5 : 17).

எலிசாவின் ஜெபத்தால் வேலைக்காரனின் கண்கள் திறக்கப்பட்டு தேவனுடைய சேனையைக் காண நேர்ந்தது.

அதுபோல நாமும் தேவனை அறிந்துகொள்ள ஞானமடையவும், நம்பிக்கையையும், தேவ மகத்துவத்துவத்தையும் காணும்படி நம்முடைய மணக் கண்கள் திறக்கப்பட பவுல் அப்போஸ்தலன் ஜெபிக்கிறார். (எபேசி 1 : 16 - 19).

இப்படி அநேகமாயிரம் அற்புதங்களையும், நன்மைகளையும் ஜெபத்தின் பலனாய் மனுஷர் அடைந்துள்ளார்கள். சபை ஆரம்பித்தவுடன் அவர்கள் உறுதியாய்த் தரித்திருந்த விஷயங்களில் ஜெபமும் ஒன்று (அப் 2 : 42).

இறுதியாக நம் தேவனுடைய சித்தப்படி :-

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்
இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்
எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்

- 1 தெச 5 : 16 -18.

இப்புதிய ஆண்டிலும் தேவனுடைய ஆசீர்வாதமும் அவருடைய கரமும் நம்மை வழிநடத்துவதாக. கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென். ●

## நல்ல மேய்ப்பன்

- வாசல் வழியாய் பிரவேசிக்கிறான்.
- ஆடுகள் அவன் சத்தத்திற்கு செவிக்கொடுக்கிறது.
- ஆடுகளை பெயர் சொல்லி அழைக்கிறான்.
- ஆடுகளுக்கு முன்பாக நடந்து போகிறான்

# உங்கள் வலைகளைப் போடுங்கள்

Bro. Tim Nichols

**லூ**க்கா ஐந்தாம் அதிகாரத்தில் பேதுருவின் விசுவாசத்தை சோதிக்கும்படியான ஒரு சவாலான விவரிப்பை நாம் வாசிக்கிறோம். பேதுரு இராமுழுவதும் பிரயாசப்பட்டு மீன் பிடித்தும் ஒன்றும் அகப்படாததால் களைப்படைந்து கரையிலே வலைகளை அலசிக்கொண்டிருந்தார். அவ்வழியாக வந்த இயேசு தன்னோடு படகில் ஏறும்படி பேதுருவுக்கு அழைப்பு விடுத்து, கடற்கரையோரத்தில் கூடியிருந்த ஜனங்களுக்கு போதகம் பண்ணும்படிக்கு படகைக் கரையிலிருந்து சற்று தள்ளும்படி பேதுருவைக் கேட்டுக்கொண்டார். ஜனங்களுக்குப் போதித்த பிறகு இயேசு பேதுருவை திரும்பிப்பார்த்து ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். பேதுரு தயங்கினார். ஓர் அனுபவமிக்க மீனவனாக இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை என்பதை இயேசுவிடம் சுட்டிக்காட்டிவிட்டு மற்ற எல்லா விசுவாச மனுஷர்களும் என்ன காரணத்திற்காகச் செயல்பட்டார்களோ, அதே காரணத்திற்காக இவரும் செயல்பட்டார்; அதைச் செய்யும்படி கர்த்தர் சொன்னார். அதற்குச் சீமோன்; ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்படும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்.

அதன் பலன் ஆச்சரியப்படத்தக்கதாய் இருந்தது! அவர்கள் தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்ற படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்குச் சைகை காட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். பேதுரு அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து அவருடைய சமூகத்தில் இருப்பதற்கு தான் பாத்திரன் அல்ல என்று ஒப்புக்கொண்டார். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி; பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அப்பொழுது, பேதுருவும், அவருடைய கூட்டாளிகளும் பிடித்த மீன்களை கரையிலே கொண்டு சேர்த்துவிட்டு, எல்லாவற்றையும் விட்டு, இயேசுவுக்குப் பின் சென்றார்கள்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, பேதுரு விசுவாசத்தில் உறுதியாக எப் போதும் இராவிட்டாலும், பல சூழ்நிலைகளில் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் துடிப்பாகக் காரியங்களை செய்திருந்தாலும், பின்பு மனுஷரைப் பிடிக்கச் சென்ற போது படகில் அவர் கற்றுக் கொண்ட பாடத்தை நினைவு கூர்ந்தார். பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேமில் திரளான கூட்டத்திற்கு பேதுரு பிரசங்கித்ததை லூக்கா, அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்திருக்கிறார். தேவனும் நடை முறையில் பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் சுவிசேஷ வலையை விரிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார். பேதுருவால் இது சரியான நேரம் இல்லை, சரியான இடம் இல்லை என்று வாதாடியிருக்க முடியும். ஆனால், அதே இடத்தில் தான் இயேசு சில நாட்களுக்கு முன்பு கொல்லப் பட்டார். இதே ஜனங்கள் தான் நம்முடைய ஆண்டவரை துன்மார்க்கமான கைகளால் சிலுவையில் அறைந்தார்கள்! எனவே, இங்கே வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பே இல்லை. ஆனாலும், தேவனுடைய அறிவுரையின்படி பேதுரு சுவிசேஷ வலையை விரித்தார் அதிலே ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் நிரப்பப்பட்டார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில் பேதுரு புற ஜாதிகள் மத்தியிலே சுவிசேஷ வலையை விரிக்கும்படியாக பணிக்கப்பட்டதை நாம் வாசிக்கிறோம். அப்படிச் செய்யத் தொடங்குவதற்கு அது சரியான காலம் என தரிசனத்தின் மூலமாக அவருக்கு அடையாள மாகக்காட்டப்பட்டது. பேதுரு சுவிசேஷ வலையை விரித்தபோது அது தேவபக்தியுள்ள கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரனை வராலும் நிரப்பப்பட்டது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேதுருவினால் விரிக்கப்பட்ட சுவிசேஷ வலை இன்றும் பெலனுள்ள தாயிருக்கிறது ( ரோமர் 1 : 16 ). தன்னுடைய பிற்காலத்தில் பேதுரு நரைமுடியுடையவராய், அனுபவமிக்கவராய் இந்த வார்த்தைகளை எழுதினார். “ மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் ” இதுவே என்று (1பேதுரு 1: 24, 25).

சுவிசேஷம் என்கிற வலை உங்கள் கைகளில் இருக்கிறது அதை விரியுங்கள்! எப்போது? “ சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ( II தீமோத்தேயு 4 : 2) எங்கே? யாருக்கு? சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் ” (வெளி

14 : 6). விசுவாசமில்லாதவர்கள் அதை எதிர்ப்பார்கள். அவர்கள் பழங்காலத்து சுவிசேஷம் இந்த நவீனகாலத்திலே எடுபடாது என்று உங்களிடம் சொல்வார்கள். அவர்கள் பழங்கால சுவிசேஷத்திற்கும், நவீன மனிதனுக்கும் இடையே ஏராளமான கலாச்சாரத் தடைகள் இருக்கிறது என்று சொல்வார்கள். அவர்கள் வலையை சற்று மாற்ற வேண்டும் என்று உங்களை வலியுறுத்துவார்கள். ஆனால், பழங்காலத்து சுவிசேஷம் பரலோகத்தில் உண்டாக்கப்பட்டது. அது என்றென்றும் நிலைத்திருக்கிறது. நம்முடைய கர்த்தர் நீங்கள் வலையைப் போட்டு விட்டு விளைவை அவரிடத்தில் விட்டுவிட வேண்டும் என உங்களுக்கு கட்டளையிடுகிறார். அவருடைய வார்த்தைக்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?. ●

## நாளும், நடப்பும்

- ஏடிஎம்களில் இனி நாளொன்றுக்கு ரூ. 10 ஆயிரம் எடுக்கலாம் – ரிசர்வ் வங்கி
- அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க, பாகிஸ்தான் பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும் – பிரதமர்
- ரூ. 15 மதிப்பிலான எம்.ஜி.ஆர் சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு
- ஏப்ரலில் ஜிஎஸ்டி சட்டத்தை அமல்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும் – மத்திய நிதி அமைச்சர்
- ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறையும் – உலக வங்கி
- தமிழகத்திற்கு வறட்சி நிவாரண நிதியாக ரூ. 39,565 கோடி தேவை – தமிழக அரசு